Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

08.12.2020 செவ்வாய்க்கிழமை தொடர்புக்கு 076 584 2222

## தீயில் எரிந்த பெண் இன்று உயிரிழப்பு!

வவுனியா, டிசெ. 8
வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சேமமடுவில் தீயில் எரிந்து படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பெண் உயிரிழந்துள்ளார். செல்வரஞ்சினி (வயது 41) என்ற பெண்ணே இவ்வாறு சாவடைந்துள்ளார். நேற்றுமுன்தினம் வீட்டில் தனித்து இருந்த சமயம் அவர் தீயில் எரிவதை அயலவர்கள் அவதா 02

## 101 மருத்துவர்கள் வடக்குக்கு

கொழும்பு, டிசெ. 8
கொழும்பு சுகாதார அமைச்சால் வடக்கு மாகாணத்துக்கு 101 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இன்று கடமைகளைப் பொறுப் பேற்றுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்ட மருத்துவர்களில் மூவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (ஓ,9)

# தமிழ் அரசியல் கைதிகளென சிறைகளில் எவருமில்லை



### இல்லாத கைதிகளை எப்படி விடுவிப்பது? கேள்வி எழுப்புகிறது ராஜபக்ச அரசு

கொழும்பு, டிசெம்பர் 8
இலங்கையில் அரசியல் கைதிகள் எவரும் இல்லை. அவர்களை விடுவிக்கவேண்டும் என்ற கோரிக்கை ஏற்புடையதல்ல என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார். 02



## வடக்குத் தமிழ் மக்களுக்கு மூவேளை உணவு போதும்

### வேறெதுவும் தேவையில்லை என்கிறது கோத்தா அரசு

கொழும்பு, டிசெ. 8
மூவேளையும் நன்றாக சாப் பிட்டு சுதந்திரமாக வாழும் சூழ்நிலையையே வடக்கு தமிழ் மக்கள் விரும்புகின்ற னர். ஆனால் புலிகளிடமும், புலம்பெயர் அமைப்புகளிடமும் சோரம்போயுள்ள தமிழ்த் தலைவர்களே அம்மக்களின் மனங்களில் குரோதத்தை விதைக்கின்ற னர். இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற குழுநிலை விவா 02



## ஆயுள்வேத பானத்துக்கு முண்டியடிப்பு!

கொழும்பு, டிசெ. 8
கொரோனாவை கட்டுப்படுத்த ஆயுள் வேத மருந்துப் பானம் தயாரித்துள்ளேன் எனத் தெரிவித்த மருத்துவரின் வீட் 02



### மன்னாரில் மஹிந்த

## காற்றாலை மின் உற்பத்தி நிலையம் திறப்பு

மன்னார், டிசெ. 8
இலங்கை அரசின் முதலாவது காற்றாலை மின் உற்பத்தி நிலையம் மன்னாரில் இன்று காலை 11 மணிக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. பிரதமர் மஹிந்த ராஜபக்ச இதனை திறந்து 02

## கரியாலைநாகபடுவான் இன்று வான் பாயலாம்!

### மக்களே அவதானம்!!

கிளிநொச்சி, டிசெ. 8
கரியாலைநாகபடுவான் குளத்தின் நீர்மட்டம் இன்று 9.9 அடியை அடைந்துள்ளது. குளத்தின் முழுக் கொள்ளளவு 10 அடி. மழை தொடர்ந்தால் இன்று பிற்பகல் வான்பாயக்கூடிய சாத்தியப்பாடு உள்ளதால் வான் பாயும் பகுதிக்கு அண்மையிலுள்ள மக்கள் மிக அவதானத்துடன் இருப்பதுடன் கால்நடைகளையும் உயர்வான நிலப் பகுதிகளுக்கு கொண்டு செல்லுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது. (ஓ,5)

## கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்க வேண்டும்!!!

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கொக்கரிப்பு

கொழும்பு டிசெ. 8
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தொடர்ச்சியாக பிரிவினைவாத கருத்துகளை சமூகத்தில் விதைப்பார்களாயின் கூட்டமைப்பை 02

### மஹர களேபரம்

## இடைக்கால அறிக்கை நாடாளுமன்றுக்கு நாளை




கொழும்பு டிசெ. 8
மஹர சிறைச்சாலை மோதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய குழுவின் இடைக்கால விசாரணை அறிக்கை நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. 02

# தமிழ் அரசியல்...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு இன்று முற்பகல் காணொலி தொழில்நுட்பம் ஊடாக நடைபெற்றது. இதன்போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தாம் வகிக்கும் அரசியல் நிலைப்பாட்டால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களையே அரசியல் கைதிகளென விளிக்கமுடியும். இலங்கையில் அரசியல் கைதிகள் இல்லை. எனவே, அரசியல் கைதிகளின் எண்ணிக்கை பூஜ்ஜியம், சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் எண்ணிக்கையும் பூஜ்ஜியம் என்ற பதிலையே வழங்கமுடியும்.

இலங்கையில் கருத்து சுதந்திரம் இருக்கின்றது. அது அடிப்படை உரிமையாகவும் அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த விடயத்தை மையப்படுத்தி எவரும் கைதுசெய்யப்பட்டு, தடுத்துவைக்கப்படவில்லை.

பயங்கரவாத குற்றச்சாட்டின் அடிப்படையில்தான் நீங்கள் கூறும் நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஆக, அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்ற விடயம் ஆளுந்தரப்பில் ஏற்புடைய காரணியல்ல.

அதேவேளை, குற்றச்சாட்டுகளின் தன்மை அடிப்படையிலேயே கைதிகள் வகைப்படுத்தப்படுகின்றனர். எனவே, தமிழ்க் கைதிகள், முஸ்லிம் கைதிகள், சிங்களக் கைதிகள் என கைதிகளை இனரீதியில் வகைப்படுத்தக்கூடாது. தண்டனை குறைப்பு, பொதுமன்னிப்பு என்று அனைத்து விடயங்களும் எல்லாக் கைதிகளுக்கும் பொருந்தும், என்றார்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு அரசில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும் உறுப்பினர்கள் கூட்டாக நீதி அமைச்சரை சந்தித்து கடந்த 5ஆம் திகதி மனு கையளித்திருந்தனர்.

இதன்போது நீதி அமைச்சர், அரசில் அங்கம் வகிக்கும் சிறுபான்மை உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து ஜனாதிபதியுடன் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்தால், சட்டமா அதிபர் உள்ளிட்ட தரப்பினரையும் அழைத்து இதுபற்றிக் கலந்துரையாட முடியும் என்று அந்தச் சந்திப்பின்போது சுட்டிக்காட்டியிருந்ததாக, அதில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனது முகநூலில் பதிவிட்டிருந்தார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலின்போது தனது வாக்குறுதிகளில் ஒன்றாக, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையையும் கோத்தாபய ராஜபக்ச குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில் அரசின் இணை ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ஒ,5,44)

## தீயில் எரிந்த பெண்...

னித்தனர். உடனடியாக மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். பொலிஸாருக்கும் தெரியப்படுத்தினர்.

மருத்துவமனையில் அவர் இன்று உயிரிழந்துள்ளார். உயிரிழப்பு தொடர்பில் வவுனியா நகர் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் மேற்கொண்டார். (ஒ,110)







## ஆயுள்வேத...

டின் முன்பாக இன்று பெருமளவு மக்கள் குவிந்துள்ளனர்.

கொரோனாவை கட்டுப்படுத்த ஆயுள்வேத மருந்து தயாரித்து அதில் வெற்றிபெற்றுள்ளேன் என மருத்துவர் தம்மிகா பண்டார தெரிவித்திருந்தார். இதனை சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாரச்சியும் பருகியிருந்தார். இந்தச் செய்தி ஊடகங்களில் வெளியாகியிருந்தது.

இந்த நிலையில் தான் கண்டுபிடித்த ஆயுள்வேத மருந்தை 5 ஆயிரம் பேருக்கு இலவசமாக இன்று வழங்கவுள்ளேன் என அவர் தெரிவித்திருந்தார். இதனையடுத்து அவரின் வீட்டின் முன்பாக பெருமளவானோர் குவிந்தனர்.

சமூக இடைவெளியின்றி அங்கு மக்கள் திரண்டதால் பொலிஸார் அவற்றைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். தம்மிகா பண்டாரா ஒரு காளி கோவிலை வைத்துள்ளதுடன் தனக்கு காளி கனவில் வந்து அருளியதாக கூறியமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ,இ)

## காற்றாலை...

வைத்துள்ளார்.

மின்சக்தி அமைச்சர் டளஸ் அழகப்பெரும, இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மன்னார் தலைமன்னார் பிரதான வீதி நடுகுடா பகுதியில் மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டில், 141 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,56)



## கூட்டமைப்பு...

குறைந்தபட்சம் ஒரு வருடத்துக்காவது தடைசெய்து, அந்தக் கட்சி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்கவேண்டும். இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அன்று பண்டாரநாயக்க, சமஷ்டி கட்சியை குறுகிய காலப்பகுதிக்கு தடைசெய்தார். எனவே, போர் முடிவடைந்த கையோடு புலிகளின் அரசியல் கிளையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தடைவிதித்திருக்கவேண்டும்.

அவ்வாறு செய்யாமல் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்ததால்தான் கூட்டமைப்பினர் அரசியல் ரீதியில் வலுப்பெற்றனர். அன்றே முடக்கியிருந்தால் இன்று தலைதூக்கி பிரிவினைவாதத்தை கக்கும் நிலை உருவாகியிருக்கக்கூடாது.

வெளிப்படையாகவே பிரபாகரன் பற்றி கதைக்கின்றனர். எனவே, குறைந்தபட்சம் ஒருவருடத்துக்காவது கூட்டமைப்பை தடைசெய்து, அக்கட்சியின் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்கவேண்டும்.

அமைச்சர் சரத்வீரசேகர வெளியிட்ட கருத்து முற்றிலும் உண்மை. அதனை வரவேற்கின்றோம். ஆனால் ஜனாதிபதி கனவில் பொன்சேகா கூட்டமைப்புக்கு வக்காலத்து வாங்குவதையும் கண்டிக்கின்றோம், என்றார். (ஒ,44)

## வடக்குத் தமிழ் மக்களுக்கு...

தத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் ஆகிய திட்டங்களின் ஊடாக வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் கட்டியெழுப்புவதற்கு மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. புலிகளால் அழிக்கப்பட்ட ரயில் பாதைகள் புனரமைக்கப்பட்டன. வடக்கு மக்களின் உற்பத்திகளை வெளியிடங்களுக்கு கொண்டுசெல்லக்கூடிய சூழ்நிலை உருவானது. போருக்கு பின்னர் வடக்கின் கலவி நிலைமை மேம்படுத்தவதற்கு மேல்மாகாணத்தில் இருந்த தமிழ் ஆசிரியர்களை அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுத்தோம்.

ஆனால் 2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு என்ன நடந்தது? எல்லாம் நிறுத்தப்பட்டன. நல்லாட்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் விலைக்கு வாங்கப்பட்டனர். ஆனால் மக்களுக்கு எவ்வித நன்மையும் பயக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று உரையாற்றுவதை செவிமடுக்கும்போது வேதனையளிக்கின்றது. இனவாதத்தை தூண்டுகின்றனர்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தேன். தெற்கு மக்கள் தொடர்பில் வடக்கிலுள்ள சில அரசியல்வாதிகள் இங்கு குரோத மனப்பான்மையை உருவாக்கியிருந்தனர். அங்குள்ள மக்களிடம் நாம் உரையாற்றினோம். மூவேளையும் நன்றாக சாப்பிட்டு சுதந்திரமாக வாழும் சூழ்நிலை உருவாவதே அவர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது.

புலிகளுக்கும், புலம்பெயர் அமைப்புகளுக்கும் சோரம் போயுள்ள அரசியல் தலைவர்கள்தான் மக்களை குழப்பியுள்ளனர். எனவே, இனவாதத்தை தூண்டவேண்டாம் என கூட்டமைப்பினரிடம் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

புலிகள் மற்றும் பிரபாகரனின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு இந்நாட்டு மக்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டார்கள். புலிகள் அமைப்பை மீண்டும் தலைதூக்கவும் இடமளிக்க மாட்டோம். ஆகவே, எம்முடன் கரம்கோர்த்து செயற்படுமாறு அழைப்பு விடுக்கின்றோம்- என்றார். (ஒ,44)

## இடைக்கால அறிக்கை...

அதிகாரிகள் இருவருக்கும் காயம் ஏற்பட்டது.

இந்நிலையில் மேற்படி சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்காக நீதி அமைச்சர் அலி சப்ரியால், மேல் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி குசலா சரோஜனி வீரவர்தன தலைமையில் ஐவரடங்கிய விசாரணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விரிவாக விசாரணை நடத்தி பரிந்துரைகள் சகிதம் ஒரு வாரத்துக்குள் இடைக்கால அறிக்கையையும், ஒரு மாதத்துக்குள் முழுமையான அறிக்கையையும் சமர்ப்பிக்குமாறு விசாரணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

மஹர சிறைச்சாலைக்கு நேரில் சென்று விசாரணைகளை நடத்தி, சாட்சியங்களை பதிவுசெய்த பின்னர் இடைக்கால அறிக்கையை




விசாரணைக்குழு நேற்று நீதி அமைச்சரிடம் கையளித்தது. இந்நிலையிலேயே நாளை அது நாடாளுமன்றத்தில் நீதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ஒ,44)

# தேங்குகின்றது வெள்ளம்; மக்களே மிக அவதானம்

## டெங்கு அச்சநிலை எனத் தென்மராட்சியில் அறிவிப்பு

சாவகச்சேரி, டிசெ. 8

தென்மராட்சிப் பிரதேசத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் மழை வெள்ளம் தேங்கிக் காணப் படுவதால் டெங்கு ஏற்படாமல், தடுக்க மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று சாவகச் சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள் ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் ததாவது:

நீர் மூன்று தினங்களுக்கு மேல் ஓரிடத்தில் காணப்பட்டால் டெங்கு நுளம்பு பல்கிப் பெருக வாய்ப்புள்ளது.

பிரதேசத்தில் பெய்துவரும் மழை வெள்ளம் வழிந்தோட பல நாள்கள் செல்லும் என எதிர் பார்க்கபபடுவதால் மக்கள் விழிப்புடன் செயற் பட்டு தம்மைத்தாமே பாதுகாக்க வேண்டும்.

காய்ச்சல் ஏற்பட்டால் தாமதிக்காமல் அருகில் உள்ள அரச மருத்துவமனைகளுக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டும் - என்றார். (ம-9)

# அறிவித்தல் பலகையில் தேசிய மொழி புறக்கணிப்பு!

கல்கிஸை, டிசெ.8

கல்கிஸை ரயில் நிலையத்தில் பொருத்தப் பட்டுள்ள அறிவித்தல் பலகையொன்று ஆங்கில மொழியிலும் சீன மொழியிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான புகைப்படமானது சமூக வலைத்தளத்தில் பதிவிடப்பட்ட பின்னரே அறிந்து கொண்டேன் என்று இலங்கை ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமை யாளர் டிலந்த பெர்ணான்டோ தெரிவித் துள்ளார்.

இந்த அறிவிப்புப் பலகை தான் பொதுமு காமையாளராக வருவதற்கு முன்னரே பொருத்தப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இந்த அறிவிப்பு பலகையை பொருத்தியமை குறித்து, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரி வித்துள்ளார். (ற-இ)

# 6,878 பேர் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, டிசெ.8

இலங்கையில் முப்படையினரால் நடத்தப்படும் 64 தனிமைப்படுத் தல் நிலையங்களில் தற்போது 6 ஆயிரத்து 878 பேர் தனிமைப்ப டுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித் துள்ளனர்.

அத்துடன், மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களில் மேலும் 7 ஆயிரத்து 634 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, திவுலுப்பிட்டிய பேலியகொட கொரோனாக் கொத்தணியில் இதுவரை 17 ஆயிரத்து 396 பேர் குணமடைந் துள்ளனர். (ற-இ)



# ஷானிக்கு எதிரான நடவடிக்கை சி.ஐ.டியினருக்கான அச்சுறுதல்

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.8

சி.ஐ.டியின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபயசேகர தொடர்ந்தும் அரசியல் பழிவாங்களுக்கு உள்ளாக்கப்படு கின்றமை பக்கச்சார்பின்றி செயற்பட முயல்கின்ற ஏனைய சிஐடியினருக்கு விடுக்கப்படும் எச்சரிக்கை என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பி னர் மனுச நாணயக்கார தெரிவித்துள்ளதாவது,

மஹரசிறையில் ஷானி அபயசேகர கொரோனாவால் பாதிக்கப்பட்டவுடன் முதலில் அவரை வெலிக்கடைக்கு கொண்டு சென்று பின்பே முல்லேரியாவில் உள்ள ஐ.டி. எச் சிகிச்சை நிலையத்துக்கு கொண்டு சென்றார்கள். அவரு டன் கைதுசெய்யப்பட்ட இரு சிஐடியினரும் தொற்றுக் குள்ளாகி உள்ளனர் எனத் தகவல் கிடைத்துள்ளது. ஆனால் அவர்களை அரசாங்கம் இன்னமும் அரச மருத்துவமனை யில் கிசிச்சைக்காக அனுமதிக்கவில்லை.

ஷானி அபயசேகர இன்று அரசியல்ரீதியில் பழிவாங்கப் படும் விதம் அரசியல்வாதிகளின் ஊழல்கள் குற்றங்களில் தலையிடவேண்டாம் என நேர்மையான பொலிஸ் அதி காரிகளுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)



# வியாட்நாமியரை ஈர்த்த இலங்கை அப்பம்

கொழும்பு, டிசெ.8

வியட்நாமிலுள்ள இலங்கைக்கான தூதரகம் மற்றும் வியட்நாம் வெளிவிவகார அமைச் சின் ஏற்பாட்டில் சர்வதேச உணவு விழா வியட்நாம் ஹெனோயில் இடம்பெற்றுள் ளது.

இந்த விழாவில் இராஜதந்திர தூதுக்குழுக்கள், சர்வதேச அமைப்புக்கள், ஹெனோயிலுள்ள அரச சார்பற்ற அமைப் புக்கள், வியட்நாம் வெளிவிவகார அமைச்சு, மாகாண ஆளுநர் அலுவலகம் உள்ளிட்ட நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டுள்ளனர்.

விழாவில் இலங்கையின் உணவு வகைகளை வியட்நாம் பிரஜைகள் மிகவும் விரும்பி உட் கொண்டதுடன், கொத்து ரொட்டி மற்றும் அப்பம் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள் ளமை விசேட அம்சமாகும். இந்த உணவு விழாவில் சுமார் 1500க்கும் அதிகமானோர் கலந்துக்கொண்டிருந்ததுடன், 115 உணவு விநியோக நிலையங்கள் அமைக்கப்பட்டிருந் தன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-இ)

# தாயகம் திரும்பினர் 481 இலங்கையர்

கொழும்பு, டிசெ.8

கொரோனாத் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 481 பேர் இன்று அதிகாலை நாட்டை வந்த டைந்துள்ளனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அபுதாபியிலிருந்து 44 பேரும் டோகாவிலிருந்து 147 பேரும் பஹ்ரைனிலிருந்து 290 பேரும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அனைவரும் விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ந-இ)



# விதிமுறைகள் மீறிய 151 பேர் கைது

கொழும்பு, டிசெ.8

தனிமைப்படுத்தல் விதிமுறை களை மீறிய குற்றச்சாட்டில் ஆயிரத்து 151 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித் துள்ளார்.

இதனடிப்படையில், கடந்த 24 மணித்தியாலங்களில் முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளி யைப் பேணாமை உள்ளிட்ட தனிமைப்படுத்தல் விதிமுறை களை மீறிய 40 பேர் உட்பட 151 பேர் கைதுசெய்யப்பட் டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-22)

# பொது சுகாதார பரிசோதகருக்கு இராணுவப் பாதுகாப்பு வேண்டும்

## கோரிக்கை விடுக்கிறது சங்கம்

களுத்துறை, டிசெ.8

களுத்துறை -அட்டுளுகம பகுதியில் கடமையில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. மேலும் அட்டுளுகம பிரதேசத்தில் வசிப்பவர்கள் சுகாதார ஆலோசனை களைப் புறக்கணிக்கும் வகையில் நடந்து கொள்கி றார்கள் என சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். (வ-இ)

# அடுத்த காலாண்டில் பொருளாதாரம் உயரும்

## பந்துல நம்பிக்கை

கொழும்பு,டிசெ.8

2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், தேசிய பொருளாதார வளர்ச்சி மட்டத்தை 5 அல்லது 6 வீதத்தால் அதிகரிக்க எதிர்பார்த்துள்ளோம் என்று அமைச்சர் பந்துல குணவர்தன நம்பிக்கை வெளியிட்டார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொவிட்19 வைரஸ் தாக்கத்தால், தேசிய பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

எனினும் நெருக்கடியான சூழ்நிலையில் அரசு நாட்டு மக்களுக்கு அத்தியாவசிய பொருள்களையும், நிவாரணக் கொடுப்பனவையும் வழங்கியுள்ளது. ஆகவே 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அரசு பல சவால்களை எதிர்கொள்ள நேரிடும். எனினும் பொருளாதாரம் வளர்ச்சியடையும் என்றும் அவர் குறிப்பிட்டார். (சு-இ)

# முட்கொம்பன் – கிளிநொச்சி வீதியை சீரமைக்க கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ.8

பூநகரி முட்கொம்பனில் மக்கள் குடியேறிய பின்னரும், முட்கொம்பனில் இருந்து ஸ்கந்தபுரம் ஊடாக கிளிநொச்சி செல்லும் வீதி இதுவரை சீரமைக்கப்படவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்ததாவது;

சுமார் 6 கிலோமீற்றர் தூரம் வரை வீதியின் நடுவே பள்ளங்கள் காணப்படும் நிலையில் மழைகாலத்தில் பள்ளங்களில் நீர் தேங்குகின்றன. சேறும் சகதியுமாக போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் அந்த வீதி காணப்படுகிறது. முட்கொம்பன், கண்ணகைபுரம் பகுதி மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக கிளிநொச்சி செல்வதற்கு இந்த வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

நாளொன்றுக்கு மூன்று முறை அரச பஸ்களும், தனியார் பஸ்களும், இந்த வீதி வழியாக யாழ்ப்பாணம் - கிளிநொச்சி சேவையில் ஈடுபட்டு வந்தன. எனினும் வீதி வழியாகப் பஸ்கள் பயணிக்க இயலாததை காரணம் காட்டி தற்போது தனியார் பஸ்கள் சேவையை நிறுத்தியுள்ளன.

தற்போது அரச பஸ்களும் வீதியில் புதையும் நிலையில் வீதி காணப்படுகிறது. எனவே அந்த வீதியை சீரமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றனர். (ஐ-ரி1)

# சிறைச்சாலை களேபரம் 145 பேரிடம் வாக்குமூலம்

கொழும்பு டிசெ. 8

மஹர சிறைச்சாலை மோதல் சம்பவம் தொடர்பில் சி.ஐ.டியினர் இதுவரை 145 பேரிடம் வாக்குமூலங்களை பதிவுசெய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண இன்று தெரிவித்தார்.

சிறைச்சாலை மருத்துவமனையில் பணியாற்றிய மருத்துவர்கள் சம்பவத்தின்போது சிறையில் இருந்த கைதிகள், சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட மேலும் சிலரிடமே இவ்வாறு வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

எதிர்காலத்திலும் பதிவு செய்யப்படும். விசாரணைகள் விரைவில் நிறைவடையும் என்று எதிர்ப்பார்க்கின்றோம்.

அதேவேளை, மோதல் சம்பவத்தில் உயிரிழந்த 11 கைதிகளில் இதுவரை 7 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. உறவினர்கள் மூலம் நால்வரின் சடலங்களும், கைவிரல் அடையாளம்மூலம் மூவரின் சடலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. உயிரிழந்தவர்களில் 8 கைதிகளுக்கு கொரோனா தொற்றியிருப்பதும் கண்டறியப்பட்டது, என்றார். (ஒ,44)

நல்லாட்சியில்

# மஹாபொல நிதி மோசடி; விசாரணை சி.ஐ.டியிடம்

கொழும்பு, டிசெ.8

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் மஹாபொல நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில் விசாரிப்பதற்கான பொறுப்பு குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார எழுப்பிய வாய்மூல விடைக்கான கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். ஒரு பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. எவ்வித காலதாமதமும் இன்றி மஹாபொல உதவித்தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். நிலுவைத் தொகை அனைத்தும் செலுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (வ-ரி4)



# வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

திருகோணமலை, டிசெ.8

தம்பலகமம் ஜெயபுர பகுதியில் நேற்றிரவு இடம் பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் என தம்பலகமம் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையில் இருந்து கந்தளாய் நோக்கி புறப்பட்ட சீமெந்து லொறியும் திருகோணமலை நோக்கி புறப்பட்ட முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதியதில் இவ் விபத்து இடம் பெற்றுள்ளது. முச்சக்கரவண்டியில் பயணித்த புத்தளத்தைச் சேர்ந்த 34 மற்றும் 38 வய துடைய குடும்பஸ்தர்கள் இருவரே விபத்தில் உயிரிந்துள்ளனர். லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். (வ-இ)

# சந்தேகநபர் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 8

கல்வியங்காட்டில் நள்ளிரவில் வீடொன்றில் திருட முற்பட்டார் எனத் தெரிவித்து பொதுமக்களால் இனந்தெரியாத நபர் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். பின்னர் அவர் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது எனக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியிலுள்ள வீடொன்றில் திருட முற்பட்டார் எனத் தெரிவித்து இனந்தெரியாத நபர் ஒருவரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்தனர். இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து சந்தேகநபரை கோப்பாய் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர்.

வீட்டின் உரிமையாளர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஒ,26,111)

# வீடு கையளிப்பு

திருகோணமலை மாவட்டத்தின் வெள்ளைமணல் கரடிப்பூவல் கிராமத்தில் கடந்த 30 வருடகாலமாக நிரந்தர வீடின்றி கொட்டிலில் வாழ்ந்த குடும்பம் ஒன்றுக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடொன்று கையளிக்கப்பட்டது.

வன்னி ஹோப் ஆஸ்திரேலியா மற்றும் மக்கள் சேவை மன்றம் என்பன இதற்கு நிதியுதவி அளித்துள்ளன. (வ-இ)

# விமான நிலையம் மீண்டும் திறப்பது நாட்டுக்கு ஆபத்தே!

## பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.8

உரிய பொறிமுறைகளை மேற்கொள்ளாது நாட்டை மீளத்திறப்பது ஆபத்தானது என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரசு எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் சுற்றுலாப் பயணிகளுக்காக மீள விமான நிலையத்தைத் திறக்க எதிர்பார்த்துள்ள நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் நடமாட்டத்தை அதிகாரிகள் கண்காணிப்பது மிக முக்கியமானது எனவும் அச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. விமான நிலையத்தை மீளத்திறப்பது தொடர்பில் அரசு நீண்டகாலமாக ஆராய்ந்து வருகின்றது.

உரிய நடைமுறைகளுடன் அதை மீளத்திறப்பதில் எந்தவொரு சிக்கலும் இல்லை என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ற-இ)

# கண்டி – பன்விலையில் முதலாவது தொற்றாளர்

கண்டி, டிசெ.8

கண்டி - பன்விலை அங்கம்மன பன்விலவத்த பிரதேசத்தில் முதலாவது கொவிட் தொற்றாளர் இனங்காணப்பட்டுள்ளார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள சுப்பர் லங்கா எனும் தனியார் நிறுவனத்தில் தொழில் புரிந்து வந்த நிலையில், இங்குள்ளவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதால் ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனையின் பின்னர் கடந்த மாதம் 30ஆம் திகதி பஸ்ஸில் குறித்த நபர் வீடு திரும்பியுள்ளார். இவர் (வயது55) பன்விலை மருத்துவ அதிகாரி காரியாலயத்துக்கு தான் ஊருக்கு வருகை தந்த விடயத்தை அறிவித்துள்ளார்.

பன்விலையில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த இவருக்கு, கடந்த 4 ஆம் திகதி பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்நிலையில் இவர் தனி மைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார். இவரது வீட்டிலுள்ள நால்வரும் சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ந-இ)




# 'சிறைக் கொத்தணி' 2,280 ஆக அதிகரிப்பு

## நேற்று மட்டும் 154 கைதிகளுக்குத் தொற்று

கொழும்பு, டிசெ. 8

இலங்கையில் நேற்று மட்டும் 154 கைதிகள் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நேற்று தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட கைதிகளில் 74 பேர் வீரவில சிறைச்சாலையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை கொத்தணியில் கொரோனாத் தொற்று வேகமாக அதிகரித்து வரும் நிலையில் ஏனைய சிறைகளில் இருந்து தனிமைப்படுத்தலுக்காக வீரவில சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டிருந்த கைதிகளில் 74 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் சிறைச்சாலை கொத்தணியில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை 2 ஆயிரத்து 280 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

# ஆயிரத்தை தொடுகின்றன தேசிய பாடசாலைகள்

## அங்கீகாரம் வழங்கியது அமைச்சரவை

கொழும்பு, டிசெ.8

தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை ஆயிரமாக உயர்த்த கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் முன்வைத்த திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் ஒன்லைன் மூலம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய இந்த திட்டத்தை மூன்று கட்டங்களாக செயற்படுத்த கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. முதல் கட்டமாக தேசிய பாடசாலைகள் இல்லாத 123 பிரதேச செயலக பிரிவுகளில் ஒவ்வொன்றிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலையை தேசிய பாடசாலையாக உருவாக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேலும், அடையாளம் காணப்பட்ட 673 பாடசாலைகள் இரண்டாம் கட்டத்தின் கீழ் தேசிய பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. அத்துடன் தற்போதுள்ள 373 தேசிய பாடசாலைகளை மூன்றாம் கட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யவும் கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. (ந-22)

# ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை: விசாரணை ஜனவரிக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, டிசெ.8

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு தொடர்பான இறுதி தீர்ப்பு அறிவிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் வழக்கு இன்று மட்டக்களப்பு மேல் நீதிமன்ற விசேட நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது பயங்கரவாத தடுப்பு பிரிவினர் உரிய ஆவனங்களை கொண்டுவராததன் காரணமாக அரச தரப்பு சட்டத்தரணி விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் வழக்கு விசாரணை ஜனவரி 11ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது என சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25 ம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டார். இச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட ஆறு பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் சட்டமா அதிபரின் ஒப்புதலின் பேரில் கடந்த மாதம் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# மனைவியை அடித்துக் கொன்ற கணவன் மருத்துவமனையில்

சிலாபம், டிசெ.8

மனைவியை மண்வெட்டியால் அடித்துக் கொன்ற கணவன் விஷம் அருந்திய நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சம்பவம் சிலாபத்தில் இடம்பெற்றுள்ளது. கணவனுக்கும் மனைவிக்கும் இடையே தகராறு ஏற்பட்ட நிலையில் அது எல்லை மீறி கொலையில் முடிவடைந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

மனைவி தூங்கிக் கொண்டிருந்தபோது நள்ளிரவில் மண்வெட்டியால் மனைவியின் தலையில் தாக்கிவிட்டு தப்பிச் சென்று விஷம் அருந்திய நிலையில் குறித்த நபர் சிலாபம் கணவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.(வ-இ)

# பாடசாலை தொடர்பான தீர்மானங்களை அதிபர்களே தீர்மானிக்கின்றனர்

## கொழும்பில் எடுக்கப்படுவது இல்லை என்கிறார் கல்வி அமைச்சர்

கொழும்பு, டிசெ.8

பாடசாலைகளை தற்காலிகமாக மூடுவதற்கான தீர்மானங்கள் யாவும் அந்தந்த பாடசாலைகளின் அதிபர்களால் எடுக்கப்படும் முடிவாகும் என கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியின் பிரதம கொறடா



வான லக் ஷ்மன் கிரியெல்ல, “கண்டி மாநகர எல்லைக்குள் 45 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமை தொடர்பில் குறுக்குக் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கெல்லாம், போகம்பர பழைய சிறைச்சாலைக்கு கைதிகள் 800 பேரை கொண்டுவந்ததுதான் காரணமாகும்” எனவும் தெரிவித்தார்.

இக் கருத்துக்கு பதிலளித்த அமைச்சர் ஜி.எல் பீரிஸ், “சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளின் அடிப்படையில், பாடசாலைகளை மூடுவதற்கான தீர்மானம் அதிபர்களால் எடுக்கப்படுகின்றது. அம் முடிவுகள் எவையும் கொழும்பில் எடுக்கப்படுவது இல்லை. அதே போல, நீங்கள் (லக் ஷ்மன் கிரியெல்ல) கூறியதுதான் கண்டி பாடசாலைகளை மூடுவதற்கான காரணமாகும். அந்நிலைமை விரைவில் மாறும் என்றார்.

# தடுப்பு மருந்து கொள்வனவுக்கு இலங்கைக்கும் வாய்ப்பளிக்குக!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, டிசெ.8

கொரோனாத் தொற்றுக்கான தடுப்பு மருந்து கண்டிபிடிக்கப்பட்டால் அதைக் கொள்வனவு செய்யக் கூடிய நிலையில் இலங்கை தற்போது இல்லை என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், செல்வந்த நாடுகள் மாத்திரம் அவற்றைக் கொள்வனவு செய்ய வாய்ப்பளிக்காது இலங்கையைப் போன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் தடுப்பு மருந்துகள் கிடைப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சங்கம் மேலும் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அளுத்கே இதனை வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் தடுப்பூசி மற்றும் மருந்துகள் பற்றிப் பேசப்படுகின்றன. எனினும், அவை இன்றும் பரிசோதனை மட்டத்திலேயே காணப்படுகின்றன.

எவ்வாறிருப்பினும், இதுவரையில் உலக சுகாதார ஸ்தாபனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு மருந்தோ அல்லது தடுப்பூசியோ உலகில் இல்லை.

மேலைத்தேய மருந்தாயினும் உள்நாட்டு மருந்தாயினும் அரசாங்கம் அது தொடர்பாக மக்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டும்.

உலகில் தற்போது காணப்படுகின்ற நிலைமையில் இலங்கைக்கு தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகும்.

கொரோனாத் தடுப்புக்கான மருந்து கண்டுபிடிக்கப்பட்டாலும் செல்வந்த நாடுகள் மாத்திரம் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்காது இலங்கையைப் போன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் அவற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் உலக சுகாதார ஸ்தாபனம் நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றார். (ந-இ)

# நாட்டில் 18,000 கிலோ போதை ஒரு வருட காலத்தில் மீட்பு

## 72 ஆயிரம் சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, டிசெ.8

நாட்டில் கடந்த 2019 நவம்பர் முதல் இதுவரையான ஒரு வருட காலப்பகுதிக்குள் 18 ஆயிரம் கிலோ பெறுமதியான பல்வேறு வகை போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பில் சுமார் 72 ஆயிரம் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மேலும், நேற்று மாரவில தொடுவாவ பகுதியில் கைப்பற்றப்பட்ட 300 கோடி ரூபா வரை பெறுமதியான ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப் பொருள்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் விதமாக இடம்பெற்ற ஒன்றிணைந்த ஊடக சந்திப்பில் கலால் வரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஆரியசிங்க போதரகம இது தொடர்பில் தெரிவிக்கையில்,

கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் கிடைத்த தகவல் தொடர்பில் விசாரிக்க நாம் இரு அதிகாரிகளை விஷேடமாக ஈடுபடுத்தினோம். அதனடிப்படையிலேயே கடற்படை மற்றும் தேசிய உளவுச் சேவையின் உதவியுடன் சுற்றிவளைப்பு. மேற்கொள்ளப்பட்டது.

இதில் 100 கிலோ ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. அவை தெமட்டகொட பகுதியைச் சேர்ந்த போதைப்பொருள் வர்த்தகர் ஒருவருக்கு அனுப்பட்டுள்ளது. ஐஸ் போதைப் பொருள் வேறொருவருக்கு வந்துள்ளது. அவர்கள் அனைவரையும் கைதுசெய்துள்ளோம். இரு கார்கள், போதைப்பொருளை கடத்திச் செல்ல தயாராக இருந்த கே.டி.எச். வேன் மற்றும் மின் பிறப்பாக்கி ஏற்றப்பட்டிருந்த பார ஊர்தி ஆகியவற்றையும் கைப்பற்றியுள்ளோம்.

மின் பிறப்பாக்கியின் உள்ளே சூட்சுமமாக மறைத்து வைத்து போதைப்பொருள் கொழும்பு கடத்தல்காரர்களுக்கு கடத்தப்பட இருந்தது.

இதனைவிட, கடத்தல்காரர்கள் கடந்த மாதம் முதல் மாரவில தொடுவாவ பகுதி ஹொட்டல் ஒன்றில் தங்கியிருந்து போதைப்பொருள் கடத்தலுக்கான வேலைகளை செய்துள்ளனர் எனத் தெரிவித்தார். (ந-இ)

# அடையாள வேலைநிறுத்த போராட்டம் இன்றுடன் முடிவு!

கொழும்பு, டிசெ.8

13 தொழிற்சங்கங்களை சேர்ந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் முன்னெடுத்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. பொலநறுவை தேசிய சரணாலயம் உள்ளிட்ட இயற்கை வளங்களை பாதுகாக்குமாறு வலியுறுத்தி நேற்றுக் காலை 8 மணி முதல் இந்த போராட்டம் முன்னெடுக்கப் பட்டது. இந்த பணிப்பகிஷ்கரிப்பால் தேசிய சரணாலயங்கள் பலவற்றின் நடவடிக்கைகள் நேற்று இடம்பெறவில்லை.

எவ்வாறாயினும், தமது பிரச்சினைகள் தொடர்பில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று அகில இலங்கை ஒன்றிணைந்த வனஜீவராசிகள் அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் பிரபாஷ் கருணாதிலக தெரிவித்துள்ளார். இதனடிப்படையில் தமது அடையாள பணிப் பகிஷ்கரிப்பை இன்றுடன் நிறைவு செய்யத் தீர்மானிக்கப் பட்டது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.(ந-இ)

# பிரதேச தேவைகளை இனங்காண புதிய வேலைத்திட்டம் விரைவில்!!

கொழும்பு, டிசெ.8

இலங்கையில் 'வேலைத்திட்டத்துடன் மீண்டும் கிராமத்துக்கு' செயற்றிட்டத்தை எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் செயற்படுத்த வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று இடம்பெற்ற நிதி அமைச்சின் ஆலோசனை செயற்குழு கூட்டத்திலேயே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கிராமிய மற்றும் அரை நகர்ப்புற பிரதேசங்களில் காணப்படும் உண்மையான தேவைகளை கண்டறிந்து இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனப் பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டினார். இலங்கையர்களில் 72 வீதமான கிராமப்புற மற்றும் அரை நகர்ப்புற மக்களின் வாழ்க்கை மட்டத்தில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் அதிகாரத்துவத்துக்கு அன்றி மக்களின் அத்தியாவசிய விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. (ந-இ)

# பி.சி.ஆர். பரிசோதனைகளை தவிர்க்கும் கம்பஹாவாசிகள்

## தனிமைப்படுத்த வேண்டியேற்படும் என எச்சரிப்பு

கம்பஹா,டிசெ.8

கம்பஹா - திஹாரி பகுதி மக்கள் பி.சி.ஆர். பரிசோதனைகளை நிராகரித்து வருகின்றனர் என மாவட்ட பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவர்கள் தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கும் பட்சத்தில் குறித்த பகுதியை தனிமைப் படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பண்டாரகம - அட்டுலுகம பகுதியிலுள்ள மக்களும் பி.சி.ஆர் பரிசோதனைகளை நிராகரித்து வருகின்றனர் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், தமக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை நடத்தும் செயற்பாடுகளுக்காக பாதுகாப்பு பிரிவின் ஒத்துழைப்பு அவசியம் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ந-இ)



# பசிலுக்கு பயணத் தடையை இன்று நீக்கியது நீதிமன்றம்!

கொழும்பு, டிசெ.8

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத் தடையை மாத்தறை நீதிவான் நீதிமன்றம் இன்று நீக்கியது.

மாத்தறையில் சுமார் 66 மில்லியன் ரூபா பெறுமதியான தென்னங்காணிக் கொள்வனவில் நிதி மோசடி செய்தார் என தெரிவித்து பசிலுக்கு எதிராக வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப் பட்டது. நகர்த்தல் பத்திர மொன்றை இன்று சமர்ப்பித்த முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணிகள், அவருக்கு விதிக்கப்பட்ட வெளி நாட்டுப் பயணத்தடையை நீக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இதனடிப்படையில் விடயங்களை ஆராய்ந்த நீதிமன்றம், அவருக்கு விதிக்கப்பட்ட 2 மாத கால வெளிநாட்டுப் பயணத்தடையை நீக்கி உத்தரவிட்டது.(ந-இ)



# அணித் தலைமை ஸ்டீவ் ஸ்மித்துக்கு

## மத்யூ வேட் விருப்பம்




புதுடில்லி, டிசெ.8

பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் அணித் தலைமைப் பதவியை இழந்த ஸ்டீவ் ஸ்மித்திடம், அணித் தலைமைப் பதவியை மீண்டும் வழங்கினால் சிறப்பாக செயல்படுவார் என்று மத்யூ வேட் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா இந்தியா இடையிலான 2 ஆவது ரி20 கிரிக்கெட் போட்டி சிட்னியில் நடைபெற்றது. காயம் காரணமாக ஆரோன் பிஞ்ச் விளையாடவில்லை. அதனால் மத்யூ வேட் பகுதி நேர அணித் தலைவராக இருந்தார்.

2018 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா அணி தென்னாபிரிக்கா சென்றபோது பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் சிக்கியது. இதனால் ஸ்டீவ் ஸ்மித் அணித் தலைமைப் பதவியை இழந்தார். ஒரு வருடம் தடைக்காலமும், அதன்பின்னர் ஒரு வருடம் அணித் தலைமைப் பதவிக்கும் தடைவிதித்தது ஆஸ்திரேலியா கிரிக்கெட் சபை.

இதனால் ஸ்டீவ் ஸ்மித் அணித் தலைமைப் பதவியை வகிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் மீண்டும் ஸ்மித்திடம் அணித் தலைமைப் பதவியை வழங்கினால் சிறப்பாக செயல்படுவார் என்று மத்யூ வேட் தெரிவித்துள்ளார். (ற-இ)

# ஆஸி. மண்ணில் கோலி சாதனை!

புதுடில்லி, டிசெ.8

இந்திய அணித் தலைவர் விராட் கோலி ஆஸி.மண்ணில் 3 வகையான கிரிக்கெட் தொடர்களை வென்று சாதனை படைத்துள்ளார்.

சிட்னியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2 ஆவது ரி-20 போட்டியில் விராட் கோலி தலைமையிலான இந்திய அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை 20 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இதன்மூலம் ஆஸ்திரேலிய மண்ணில் 3 வகையான போட்டியிலும் (டெஸ்ட், ஒருநாள், ரி-20) தொடரைக் கைப்பற்றிய முதல் இந்திய அணித் தலைவர் என்ற சாதனையை கோலி படைத்துள்ளார். இதற்கு முன்பு, 2018-2019 ஆம் ஆண்டில் கோலி தலைமையில் இந்திய அணி ஆஸ்திரேலிய மண்ணில் 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரை 2:1 என்ற கணக்கிலும், 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் போட்டி தொடரை 2:1 என்ற கணக்கிலும் வென்றது. (ற-இ)



# ஒலிம்பிக்கில்! பிரேக் டான்ஸ்

பரிஸ், டிசெ.8

பரிஸ் நகரில் 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் “பிரேக் டான்ஸ்” நடனம் முதன்முறையாக ஒரு போட்டியாக சேர்க்கப்படவுள்ளது. இந்த ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் ஜப்பான் நாட்டின் டோக்கியோ நகரில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தன. இதற்காக வீரர்கள் தயாரான நிலையில் கொரோனாத் தொற்றால் எதிர்வரும் 2021ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் திகதிக்கு ஒலிம்பிக் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டன.

இதையடுத்து, பரிஸ் நகரில் 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அடுத்த ஒலிம்பிக் போட்டியில் முதல் முறையாக நடனம் மற்றும் விளையாட்டு ஆகியவற்றை உள்ளடக்கி “பிரேக் டான்ஸ்” ஒரு போட்டியாக சேர்க்கப்படவுள்ளது.

இதற்காக “பிரேக் டான்ஸ்ஸில்” சிறந்து விளங்கும் போட்டியாளர்களில் 16 ஆண்கள் மற்றும் 16 பெண்கள் கலந்து கொள்வார்கள். அதனால் ஒலிம்பிக் போட்டியை அதிக அளவான இளைஞர்கள் ஆர்வத்துடன் பார்வையிடுவார்கள் என்று நம்பப்படுகின்றது. (ற-இ)




# ஒற்றைக் கிட்னியுடன் சாதனை படைத்தேன்

## அஞ்சு தகவல்

பரிஸ், டிசெ.8

ஒற்றைச் சிறுநீரகத்துடன் உலகில் உயர்ந்த நிலையை எட்டிய ஒரு சில அதிர்ஷ்டசாலிகளில் நானும் ஒருவர் என உலக தடகளத்தில் பதக்கம் வென்ற அஞ்சு தெரிவித்துள்ளார்.

2003 ஆம் ஆண்டு பரிஸில் நடைபெற்ற உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீராங்கனை அஞ்சு பாபி ஜார்ஜ் நீளம் தாண்டுதலில் வெண்கலப் பதக்கம் வென்று சரித்திரம் படைத்தார். உலக தடகளத்தில் பதக்கம் வென்ற ஒரே இந்திய வீராங்கனையான அஞ்சு 2004 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் 6 ஆவது இடம் பிடித்தார்.

ஆசிய மற்றும் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்று இருக்கும் 43 வயதான அஞ்சு ஒற்றை சிறுநீரகத்துடன் இந்த சாதனையைப் படைத்துள்ளார் என்ற அதிர்ச்சிகரமான தகவலை நேற்று வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தனது டுவிட்டர் பதிவில், ‘நம்பினால் நம்புங்கள், ஒற்றைச் சிறுநீரகத்துடன் உலகில் உயர்ந்த நிலையை எட்டிய ஒரு சில அதிர்ஷ்டசாலிகளில் நானும் ஒருவர் எனப் பதிவிட்டுள்ளார்.

வலி நிவாரணி மருந்து கூட எனக்கு ஒத்துக் கொள்ளாது. இந்தத் தடைகளை எல்லாம் தாண்டி தான் தடகள போட்டியில் பங்கேற்று சாதனை படைத்துள்ளேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-இ)